**தலைப்பு 211 – அரச அச்சக திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 3.1.2 மற்றும் அட்டவணையில் அடங்கிய வருமானக் குறியீடுகள் தொடர்பான வருமானக் கணக்கும் அரச அச்சக திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 211 – அரச அச்சக திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை

விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அரச அச்சக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | 128 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
| --- | --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. நிலைபேறான அபிவிருத்தி நோக்கி நெருங்குவது தாமதம் | 2.1.1 |
| | | 2. முகாமைத்துவ திறமையின்மை | 2.6 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள தாமதம் | 2.2 |
| | | 2. பாடப்புத்தகம் அச்சிடும் செயன்முறையில் குறைபாடுகள் | 2.1.2 |
| | | 3. கணக்காள மற்றும் முகாமைத்துவ குழுக்கள் | 2.10 |
| | | 4. மனிதவள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டி ருக்கவில்லை.<br>2. இணக்கமின்மை | 2.8<br><br><br>2.9 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை | 2.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விஷேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கு முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| 128(2)(உ) | நிறுவனங்களிலிருந்து நிலுவை வருமானம் மீதான தகவல்கள் அழைத்திருந்த போதிலும் அந்த தகவல்கள் மற்றும் திணைக்கள த்தில் தகவல்கள் இணங்கியிருக் கவில்லை. | வருமானக் கணக்கில் காணப்பட்ட குறைபாடுகள் | 2.5 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

**நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குவதில் தாமதம்**

ஐக்கியநாடுகள் அமைப்பின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' இன் படி நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கான தயார் நிலை தொடர்பாக திணைக்களம் அறிந்திருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல், சுட்டிகளை இனங்காணல், அதற்காக மனித மற்றும் பௌதீக வழங்களை ஒதுக்குதல், தரவுகளை சேகரித்தல் ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
மேற்கூறியவாறு 2030 நிகழச்சி நிரல் தொடர்பாக அரசாங்க அச்சகத் திணைக்களம் அறிந்திருக்காமையினால் அதன் கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.1.2 பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கல்வி அமைச்சில் இருந்து கிடைக்கும் பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடும் கட்டளைகள் குறைவடைந்தமையால் அந்த நிலைமையை சிறந்த நிலைமையாக மாற்றும் செயன்முறையொன்று தயாரித்து முறையான திட்டம் ஒன்று வகுக்கும்படி 2009 செப்டம்பர் 11 திகதி கூடிய அரச கணக்கு குழுவினால் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரை அதற்கு முறையான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் அச்சிடுவதற்கான திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த பாடசாலை பாடப் புத்தக கட்டளை இலக்கம் 01 முதல் 10 இற்கு இடைப்பட்ட வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன் அங்கு வளர்ச்சி ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 ஆண்டிற்கான கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் கிடைத்திருந்த கட்டளை தொடர்பாக பாடசாலை பாடப் புத்தகங்கள் 10 வகையில் 7 உம் தாமதமாக அச்சிடப்பட்டிருந்தது. தாமதகாலம் 01 நாள் முதல் 187 நாட்கள் வரை காணப்பட்டது இந்த பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடும் கருமத்தை நிறைவேற்றுவதற்காக 2018 செப்டம்பர் 06 திகதி வரை கல்வி வெளியீட்டு திணைக்களத்தில் இருந்து ரூபா 55.3 மில்லியன் கிடைத்திருந்ததுடன் அப்பணத்தின் ரூபா 5.4 மில்லியன் தாமதக் கட்டணம் மற்றும தண்டம் செலுத்த நேரிட்டிருந்தது.

(ஈ) பாடசாலை பாடப்புத்தக அச்சிடும் செயன்முறையில் எந்த பிரிவு/ பிரிவுகளினால் தாமதம் ஏற்பட்டுள்ளது என தகவல்களை கண்டறிவதற்கான தகவல்கள் முறைமை ஒன்று திணைக்களத்தில் காணப்படவில்லை. இதன் காரணமாக கடந்த ஆண்டுகளின் போது பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடும் அலுவல்கள் தாமதமாகும் சிக்கலை தீர்பதற்கு திணைக்களத்திற்கு முடியாதுள்ளது.

### 2.1.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்டம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைகளத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிதியாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், அது 2018 ஆகஸ்ட் 10 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை செயன்முறையினுடாக வழங்கல்கள் சேவைகள் பெற்றுக் கொள்ளல்

### 2.2.1 பெறுகை செயன்முறையை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் கூட்டுப்பெறுமதி ரூபா 109.38 மில்லியன் தொகைக்கான கடதாசி 1626 மெற்றிக் தொன்கள் இறக்குமதி செய்யும் போது விலை மனு பதிவேட்டின் பிரகாரம் நாணய பத்திரம் திறந்த நாள்முதல் 21 நாட்களில் இருந்து 45 நாட்கள் வரையான காலப் பகுதியில் இருப்பினை வழங்குவதற்கு வழங்குனர் இணங்கியிருந்த போதிலும் 01 மாதம் முதல் 03 மாதம் வரை தாமதித்து கடதாசி இருப்பு கிடைத்திருந்தது.

(ஆ) விலை மனு பதிவேட்டின் பிரகாரம் அவ்வாறு இருப்புகள் வழங்குவதற்கு தாமதிக்கப்படும் அனைத்து வாரங்களும் விலைமனுவில் இணங்கிய பெறுமதியில் 2 சதவீதம் வழங்குனரிடம் அறவீடு செய்யப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம ரூபா 19.24 மில்லியன் தொகை தாமத கட்டணம் என அறவிடப்பட வேண்டுமெனினும் தாமத கட்டணம் ஏதும் அறவீடு செய்திருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை**

2016 திசெம்பர் 29 திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் பிரகாரம் 13 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்படவில்லை.

**2.4 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 1,619.37 | 1,372.46 | 246.91 | 15 |
| | மூலதன | 166.60 | 129.21 | 37.38 | 22 |
| | **மொத்தம்** | **1,785.97** | **1,501.67** | **284.29** | **16** |
| 2014 | மீண்டுவரும் | 1,776.71 | 1,776.55 | 0.15 | 0 |
| | மூலதன | 141.00 | 105.71 | 36.78 | 26 |
| | **மொத்தம்** | **1,919.21** | **1,882.26** | **36.93** | **2** |
| 2015 | மீண்டுவரும் | 1,833.83 | 1,789.62 | 44.21 | 2 |
| | மூலதன | 173.01 | 146.43 | 26.58 | 15 |
| | **மொத்தம்** | **2,006.84** | **1,936.05** | **70.79** | **4** |
| 2016 | மீண்டுவரும் | 1,904.00 | 1,752.14 | 151.85 | 8 |
| | மூலதன | 98.00 | 89.68 | 8.32 | 8 |
| | **மொத்தம்** | **2,002.00** | **1.841.82** | **160.17** | **8** |
| 2017 | மீண்டுவரும் | 2,209.92 | 2,207.72 | 2.20 | 0 |
| | மூலதன | 120.27 | 119.91 | 0.36 | 0 |
| | **மொத்தம்** | **2,330.19** | **2,327.63** | **2.56** | **0** |

## 2.5 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

அச்சக திணைக்களத்தினால் 2017 ஆண்டிற்கான வருமானக் குறியீட்டு இலக்கம் 02.03.02.05 இற்கான கூட்டுத்தொகை ரூபா 600 மில்லியன் வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 611.67 வருமானம் ஒன்றினை சேகரித்திருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 102 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | மிகைத்தல் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 20-03-02-05 | 600.00 | 611.67 | 11.67 | 102 |

### 20.03.02.05 கொண்ட வருமானக் குறியீடு - அரச அச்சக திணைக்களத்தின் பெறுவனவுகள்

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 788.6 மில்லியன் இற்கான வருமான நிலுவையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 28 வருடங்களுக்கு இடைப்பட்ட கால வீச்சை சேர்ந்தவை இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1989 முதல் 2009 வரையான காலப் பகுதியில் நிலுவையாக இருந்த ரூபா 202.93 மில்லியன் இற்கான மீதியில் சுமார் 18 சதவீதம் ஆன ரூபா 36.46 மில்லியன் மாத்திரம் நடைமுறை ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 முதல் 2016 வரை காலப் பகுதி தொடர்பான கடன் மீதி ஆகிய ரூபா 355.4 மில்லியன் தொகையில் 13 சதவீதமான 45 மில்லியன் மாத்திரம மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாணடு இறுதி அளவில் திணைக்களத்தினால் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அச்சு விடயங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 10,174,643 ஆகும் அந்த கடன் மீதியில் ரூபா 931,096 தொகை 13 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலம் முதல் நிலுவையாக காணப்பட்டதுடன் 2014 ஆண்டு முதல் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதி ரூபா 9,243,547 ஆகும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அவை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 திசெம்பர் 16 திகதி அமப/97/5232/17/35 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் 1998 பெப்ரவரி 26 திகதி அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வருடாந்த வாணிப உற்பத்தி பெறுமதி அடிப்படையாக கொண்டு வாணிப அச்சீட்டுப் படி செலுத்தப்பட வேண்டும் எனினும் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 78.91 தொகைக்கான வாணிப உற்பத்தி வருமானம் அல்லாத வருமானமும் உற்பத்தி வருமானம் என கணித்து வாணிப அச்சீட்டுப் படி கணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் கிரய முறை ஒன்று நிறுவப்படல் உற்பத்தி திறன் (Productivity) 2 முன்னேற்றுதல் மற்றும் அச்சீட்டுப் படி செலுத்துவதற்காக இனங்காணப்பட்ட ஏற்பாடுகளுடன் செயற்திட்டம் ஒன்று (Project) அல்லது முற்பணக் கணக்கு ஒன்று ஏற்படுத்துதல் ஆகிய விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என 2018 பெப்ரவரி 26 திகதி நடைமுறை அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அத்தீர்மானத்தை செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளரின் 2014 மார்ச் 01 திகதி எம்எம்ஐ/05/06/2/13-2 கொண்ட கடிதத்தின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு விடுமுறை நாள் கடைமையாற்றுவதற்காக விடுமுறை நாள் சம்பளம் வழங்குவதற்கும் அந்த நாட்களுக்காக வேறு படிகள் செலுத்தாமல் இருக்கவும் வேறு படிகள் எதற்கும் அந்த நாட்களை கணிக்காமல் விடவும் நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வாணிப அச்சிடும் படி செலுத்தும் போது விடுமுறை நாள் சம்பளம் பெற்றிருந்த நாட்களில் கடமைகளை மேற்கொண்டிருந்த மணித்தியால எண்ணிக்கையும் வாணிப அச்சிடல் படியாக பெறுவதற்கு பயன்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் 25 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது உரிமை இல்லாத வாணிப அச்சிட படி மொத்தம் ரூபா 4.443,872 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 21101 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 80 | 79 | 53 | 68 | 350 | 214 |

**நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கு உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 9,037,515 தொகை காணப்பட்டது இந்த ஒட்டு மொத்த கடன் மீதியில் 52 சதவீதம் ஆகிய ரூபா 4,712.862 தொகை 05 வருடங்களை விட பழமையான மீதிகளை காணப்பட்டதுடன் அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யும் தொடர் செயல் நடவடிக்கை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

## 2.8 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அரசாங்க அச்சக திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| (i) பொறுப்புகளின் பதிவேடு | நிதிப் பிரமாணம் 211(1) |
| (ii) வாகனங்கள் அட்டவணைபடுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) |

## 2.9 இணக்கமின்மை

**சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணங்கியிருக்கும் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலை கட்டளை சட்டத்தின் பிரிவு 41மற்றும் 42 | (i) திணைக்களத்தின் தீ விபத்து சமிக்ஞை முறைமை ஒன்று நிறுவி இருக்கவில்லை.<br>(ii) அவசர சந்தர்பங்களின் பாதுகாப்பு சமிக்ஞை மூலம் அறிந்திருக்க வில்லை. |
| 2016 திசெம்பர் 09 திகதி 252/2016 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 09 | ஒதுக்கீட்டு கணக்கிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்காக நிதி செயலாற்றுகை கூற்று, நிதி நிலைமை கூற்று மற்றும் காசு பாய்ச்சல் கூற்று 2018 ஜுன் 30 திகதிக்கு முன்னர் தயாரித்து அரச கணக்கு திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்க வேண்டு மெனினும் அவ்வாறு செய்திருக்க வில்லை. கடந்த ஆண்டிலும் மேற்கூறிய நிதி கூற்றுகள் தயாரித்திருக்கவில்லை. |

## 2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2016 ஜனவரி 28 ஆம் திகதி DMA/2009(1)(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 ஜுன் 09 திகதி DMA/2009(1) இலக்கம் கொண்ட சுற்றறிக்கை 06 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் தலைவர் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகிய திணைக்களத்தின் அனைத்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வீதம் ஆண்டிற்கு கணக்கு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 6 நடாத்தப்பட வேண்டும் எனினும் 2017 ஆண்டின் போது 06 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

(அ) மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 994 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆழுக்கான செலவு ரூபா 806,164 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 17 | 20 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 04 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1234 | 632 | 602 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 694 | 575 | 119 | - |
| (v) | அமைய/ ஒப்பந்தம் | | 05 | - | 05 |
| | மொத்தம் | 1,973 | 1,233 | 745 | 05 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அச்சு துறை புதிய தொழில்நுட்பங்களுடன் தீவிரமாக முன்னேற்றும் துறை ஒன்றாக காணப்படுவதினால் அச்சக கூட்டுத்தாபனங்களில் ஒவ்வொரு பிரிவுக்கு இணைக்கப்பட வேண்டிய பதவியணி உரிய வேலை ஆய்வு ஒன்றின் மூலம் காலத்திறகேற்ப இனங்கண்டிருக்கவில்லை.

**(ஆ) பதவியணி பயிற்சி வழங்கள்**

மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் பயிற்சி வழங்கும் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.